திருச்சி தெற்கு மாவட்டம் திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் காந்தாலூர் ஊராட்சி வாக்குச்சாவடி எண் 290–ல் "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி" ஆலோசனைக்கூட்டம் காந்தலூர் மாரியம்மன் கோயில் தெருவில் நடைபெற்றது. அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையேற்று ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் தொகுதி பார்வையாளர் மணிராஜ், ஒன்றியக் கழகச் செயலாளர்க கங்காதரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கேயம் சட்டமன்ற தொகுதி, "என் வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி" எனும் சிறப்பு வாக்காளர் சீர்திருத்தம் (SIR) க்கான வழிமுறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வார்டு, கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், சட்டமன்றதொகுதிக்குட்பட்ட (BLA2) பாகநிலைமுகவர்கள் (BDA) பூத்டிஜிட்டல்ஏஜென்ட்கள், சார்புஅணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வார்டு, கிளை கழக நிர்வாகிகள் மற்றும் பூத் ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை -

ரூ.65.99 கோடியில் கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் புதிய சாலை!

பேரவைத் தலைவர் மு.அப்பாவு துவக்கி வைத்தார்!

நெல்லை. நவ. 3 –

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரம் புறவழிச் சாலையை முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலி காட்சி வாயிலாக (01.11.2025) அன்று துவக்கி வைத்தார்கள்.

அதனை தொடர்ந்து அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை கல்லிடைக்குறிச்சி பொட்டல் பகுதியில் ரூபாய் 65.99 கோடியில் திருச்செந்தூர், பாபநாசம், தென்காசி, குற்றாலம், செங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு செல்லும் வசதியாக புதிதாக அமைக்கப்பட்ட புறவழிச் சாலை துவக்க விழா நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, மாவட்ட ஆட்சியர் மரு.இராசுகுமார் தலைமையில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ.மாவட்ட ஊராட்சி தலைவர் ஜெகதீஸ் ஆகியோர் முன்னிலையில் மரக்கன்றுகளை நட்டு வைத்து அப்பகுதி மக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பித்தார்.

பின்னர் சட்ட பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் ஏழை,எளிய மக்கள் பயன்பெறும் வகையில் சிறப்பான திட்டங்களை அறிவித்து தொடர்ந்து சிறப் பாக செயல்படுத்தி வருகிறார்கள். அம்பாசமுத்திரம் புறவழிச் சாலை அமைக்க வேண்டும் அம்பாசமுத்திரம் பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று முதல்வர் அவர்கள் புறவழிச் சாலையினை காணொலி காட்சி வாயிலாக இன்று திறந்து வைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது போக்குவரத்து தடையில்லாமல் இயங்கவும்,பொது மக்களின் நேரவிரயத்தை தவிர்க்கவும், விபத்துக்களை குறைக்க வும், இப்பகுதியில் தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவும், அம்பாசமுத்திரம் புறவழிச்சாலை முக்கிய பங்கு வகிக்கிறது.

அ.தி.மு.க.விலிருந்து சட்டமன்ற உறுப்பினர் செங்கோட்டையன் நீக்கம் செய்யப்பட்டது.தொடர்பாக எந்த கடிதமும் அ.தி.மு.க. சார்பில் சட்டமன்ற பேரவைக்கு கொடுக்கவில்லை. அவ்வாறு கடிதம் அளிக்கும் பட்சத்தில் மனு மீது பரிசீலனை செய்யப்படும். அ.தி.மு.க.அளிக்கும் ஆவணத்தின் அடிப்படையில் ஆய்வு நடத்தி செங்கோட்டையன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பாரதப் பிரதமர் உயர் பதவியில் இருந்து கொண்டு தேர்தலுக்காக தமிழகம் குறித்த வார்த்தைகளை பயன்படுத்தி இருக்க வேண்டாம். தமிழகத்தில் வடமாநிலத்தவர் கள் துன்பமாக இல்லை,இன்பமாக இருக்கின்றனர்.வட மாநிலத்தில் இருந்து தமிழகத்தில் வசிப்பவர்களும் தமிழக அரசின் திட்டங்களை பயன்படுத்தி பயன் பெற்று வருகின்றனர்.

பா.ஜ.க.கூட்டணியில் உள்ள நிதீஷ் குமார் செய்யும் துன்பத்தால் தான் அங்கிருந்து புலம்பெயர்ந்து, அங்கு உள்ளவர்கள் தமிழகம் வந்து,இன்பமாக வாழ்கிறார்கள். பாபநாசம் மணிமுத்தாறு அணையை இணைப்பதற்கான ஆய்வு நடத்தி திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். நகராட்சி நிர்வாகத் துறையில் 2538 பணி இடங்களை அமைச்சர் கே.என்.நேரு நேர்மையாக வெளிப்படை தன்மையோடு அண்ணா பல்கலைக்கழக உதவியுடன் நியமனம் செய்துள்ளனர். பணி நியமனத்தில் எந்த தவறும் நடைபெறவில்லை. அமலாக்கத் துறை தமிழக டி.ஜி.பி.க்கு பணி நியமனத்தில் ஊழல் நடந்திருப்பதாக விசாரணை நடத்த கடிதம் அனுப்பி உள்ளது.இந்த கடிதம் உச்ச நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது,நீதிமன்ற அவமதிப்பு ஆகும். உறுதிப்படுத்தப்படாத ஆவணங்கள் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை அல்லது விசாரணை ஆகியவையை அனுமதிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.

அமலாக்கத்துறை ஆகியவை சகாரா நிறுவனத்தில் 2017 ம் ஆண்டு சோதனை நடத்திய போது தற்போதைய பிரதமர் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது 25 கோடியை நான்கு தவணையாக கையூட்டு பெற்றதாக தகவல் வெளியானது.இது தொடர்பாக பொதுநல வழக்கில் பிரதமர் மீது சுமத்தப்பட்ட கையூட்டு குற்றச்சாட்டு தொடர்பாக சிறப்பு புலனாய்வு குழு அமைத்து விசாரிக்க கேட்கப்பட்டது. அந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் உயர் அரசியலமைப்பு செயல்பாட்டாளர்கள் மீது உறுதி செய்யப்படாத ஆவணங்கள் மூலம் விசாரணைக்கு உத்தரவிட்டால் ஜனநாயகத்திற்கு ஆபத்தானது, எதிரானது,என தீர்ப்பளித்தனர். எந்த தவறும் செய்யாத அமைச்சர் கே என் நேரு மீது ஊழல் குற்றச்சாட்டு என அமலாக்கத்துறை தமிழக டி.ஜி.பி.க்கு தபால் கொடுத்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் உத்தரவை மீறி உறுதிப்படுத்தப்படாத ஆவணங்களை வைத்து அமைச்சர் நேரு மீது ஊழல் குற்றசாட்டினை வைத்து தமிழக டி.ஜி.பி.க்கு கடிதம் அனுப்பியது தவறு.குஜராத் முதலமைச்சர் ஆக இருந்த போது பிரதமர் மோடி கையூட்டு பெற்றதாக வெளியான ஆவணங்களை வைத்து அமலாக்கத்துறை அவரை கைது நடவடிக்கைக்கு ஆணையிடுமா அதற்கு அமலாக்க துறைக்கு தைரியம் உள்ளதா? என அவர் கேள்வி எழுப்பினர்.

மணல் ஊழல் டாஸ்மாக் ஊழல் என உறுதிப்படுத்தப்படாத தகவல்களை வைத்து தேர்தல் நேரத்தில் தமிழக அரசுக்கு நெருக்கடி கொடுக்கலாம் என்ற ஒத்த நோக்கத்தில் இது போன்று அமலாக்கத்துறை செயல்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் மீது அமலாக்கத்துறை அதிகாரிகள் விசாரணை செய்ய டி.ஜி.பி.க்கு கடிதம் அனுப்பிய குற்றத்திற்காகவே அமலாக்கத்துறை அதிகாரி மீது 2017 உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி மீது நடவடிக்கை எடுக்கலாம்.தேர்தல் நேரத்தில் அமலாக்கத்துறை வேண்டுமென்றே இது போன்று செயல்படுகிறது.தமிழக ஆளுநர் சட்டமன்றத்தில் நிறைவேற்றிய பாதி மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார். மீதி மசோதா அவரிடமே கிடப்பில் உள்ளது.

இவ்வாறு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நிகழ்வில் அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் பரணிசேகர், விக்ரமசிங்கபுரம் நகர்மன்ற தலைவர் செல்வசுரேஷ் பெருமாள்,அம்பை நகர்மன்றத் தலைவர் பிரபாகரன், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணை தலைவர் இசக்கிப்பாண்டி, ஆலங்குளம் தொகுதி பார்வையாளர் கணேஷ் குமார் ஆதித்தன், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சாலமன் டேவிட்,அருண் தவசு பாண்டியன்,வி.கே.புரம் நகர செயலாளர் கணேசன்,அரசு வழக்கறிஞர் காந்திமதி நாதன் மற்றும் அரசு அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகராட்சி, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் : 27 கங்குவார் வீதி, பேரநாயுடு வீதி, துரைசாமி லே அவுட் பகுதிகளில் ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய மழைநீர் வடிகால் அமைக்கும் பணியை மாமன்ற உறுப்பினர் அம்பிகா தனபால் முன்னிலையில் மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் துவக்கி வைத்தார். இதில் மோகன்ராஜ், தனபால், மணிகண்டன், வட்டக் கழக துணை செயலாளர் செந்தில் குமார், மகளிர் அணி லோகேஸ்வரி, வேலுசாமி, அன்பழகன், ரமேஷ் குமார், மதிவாணன், அகமது பாஷா, ராஜேந்திரன், கிருஷ்ணமூர்த்தி, அன்பரசி, திலகவதி, தேவி, ரத்தினா உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட நிர்வாகிகளுடனான காணொளி காட்சி வாயிலான ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு வருகிற 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் மீண்டும் கழக ஆட்சி அமைய அனைவரும் பாடுபட வேண்டும் என சிறப்பு உரையாற்றினார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் –பிரகாஷ், மாநகர மேயர் சத்யா, சுகுமாரன், துணை மேயர் ஆனந்தய்யா, மாதேஸ்வரன், ஞானசேகரன், புஷ்பா சர்வேஷ் எல்லோரா மணி, தொ.மு.ச. கோபாலகிருஷ்ணன், ராமு, வெங்கடேஷ், கஜேந்திர மூர்த்தி உள்ளிட்ட பலர் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. தலைமை!

மாவட்ட பிரதிநிதி ஆற்காடு சிவா இல்ல மணவிழா!

அமைச்சர் ஆர்.காந்தி - கமலா காந்தி - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்துரை!

ஆற்காடு, நவ.4-

இராணிப்பேட்டை மாவட்டம், மாவட்டப் பிரதிநிதி ஆற்காடு சிவா (எ) ராஜ்குமார் - ஜெயந்தி ஆகியோரின் புதல்வர் ஆர். காமேஷ்வரனுக்கும் இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு, நினைவில் வாழும் பி.கருணா - கே. செல்வி ஆகியோரின் புதல்வி கே.ஹரிணிக்கும் மணவிழா 10.11.2025 திங்கள் காலை 6 மணியளவில் ஆற்காடு - ஆரணி ரோடு, விலாரி கூட்ரோடு, கே.பி.ஜெ. திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மணவிழாவிற்கு ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

நகரச் செயலாளர் ஏ.வி. சரவணன் வரவேற்புரையாற்றுகிறார்.

வினோத் காந்தி, ஏ.கே. சுந்தரமூர்த்தி, ஏ.வி.சாரதி, பொன். ராஜசேகர் உள்ளிட்ட கழகத்தினர் பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இத்திருமணத்தை மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி, திருமதி கமலா காந்தி, ஆகியோர் நடத்தி வைத்து வாழ்த்துகின்றனர்.

இதில் எஸ்.ஜெகத்ரட்சகன், எம்.பி., ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., க. சுந்தர் எம்.எல்.ஏ., நல்ல தம்பி எம்.எல்.ஏ., சி.வி. எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ. டி.எம்.கதிர்ஆனந்த் எம்.பி., பி.என்.பி.இன்பசேகரன், தி.அ.முகமது சகி, ஜெ.லட்சுமணன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு வரவேற்புரை!

நீலகிரி மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம்!

கா.ராமச்சந்திரன் – பா.மு.முபாரக் பங்கேற்பு!

நீலகிரி, நவ,4-

நீலகிரி மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயத்தில் மாவட்ட அவை தலைவர் போஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜு அனைவரையும் வரவேற்றார். கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் பா.மு.முபாரக் , தேர்தல் பணி செயலாளர், அரசு கொறடா கா.ராமசந்திரன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பரமேஸ்குமார், தென்றல் செல்வராஜ், திராவிடமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் SIR வாக்காளர் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணிகள் குறித்தும்,

நீலகிரி மாவட்டத்தில் "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" பூத் பரப்புரை நிகழ்ச்சிகளை சிறப்புடன் நடத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள் ரவிகுமார், லட்சுமி, மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி, செந்தில் ரங்கராஜ், தம்பி இஸ்மாயில், சுனிதா நேரு, மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, நகர செயலாளர்கள் ஜார்ஜ், ராமசாமி, இளஞ்செழியன், சேகரன், ரமேஷ், ஒன்றிய கழக செயலாளர்கள் பரமசிவன், லாரன்ஸ், நெல்லை கண்ணன், காமராஜ், தொரை, பிரேம்குமார், பீமன், சிவானந்தராஜா, சுஜேஷ், ராஜ்குமார், ஜெகதீசன், உத்தமன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, லியாகத் அலி, செல்வம், உதயதேவன், மோகன்குமார், வாணீஸ்வரி, மகேஷ், காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் பிரகாஷ் குமார், உதயகுமார், நடராஜன், சதீஸ்குமார், சுந்தர்ராஜ், காளிதாஸ், முத்து, ரமேஷ்குமார், சின்னவர், சுப்ரமணி,

மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சசிகுமார், கோமதி, ராஜா, எல்கில் ரவி, காந்தல் ரவி, ஆலன், விவேகானந்தன், ரஹமத்துல்லா, ஜெயந்தி, வெங்கடேஷ், பவீஷ், செந்தில்நாதன், ஜெயகுமார், சுரேஷ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் பாபு, நாகராஜ், முரளிதரன், நகராட்சி தலைவர்கள் பரிமளா, சிவகாமி, பேரூராட்சி தலைவர்கள் கலியமூர்த்தி, கௌரி, சித்ராதேவி, வள்ளி, ராதா, சத்தியவாணி, பங்கஜம், தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன் உட்பட கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

கே.பழனியப்பன் முன்னிலை! கீழ்வேளூர் வடக்கு – தெற்கு ஒன்றிய

திமு.க. நிர்வாகிகள் - பி.எல்.ஏ. 2- பி.டி.ஏ. கலந்துரையாடல் கூட்டம்!

ப.கோவிந்தராசன் – அ.பாரிபாலன் சிறப்புரை!

நாகை, நவ.4 -

நாகை மாவட்ட கீழ்வேளூர் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய திமு.க. நிர்வாகிகள், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், , வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ) கலந்துரையாடல் கூட்டம் கீழ்வேளூரில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக அவைத் தலைவர் தங்க. மனோகரன் தலைமை தாங்கினர்.

கீழ்வேளூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் .கே. பழனியப்பன், தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் ரெக்ஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பிரதிநிதி ஆர்.நடராஜன் வரவேற்றார். கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், கீழ்வேளூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பகோவிந்தராஜன் கூட்டத்தின் நோக்கம் குறித்தும் கூட்டத்தில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானங்கள் குறித்தும் பேசினார்.கூட்டத்தில் தகவல் தொழில் நுட்ப அணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.பாரிபாலன் வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ) பணிகள் குறித்து பேசினார்கள். கூட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தால் எஸ்.ஐ.ஆர். எனப்படும் தீவிர திருத்தம், ஒவ்வொரு வாக்கு சாவடியிலும் நடைமுறை படுத்தியுள்ளது. கழக வாக்கு சாவடி முகவர்களும், வாக்கு சாவடி டிஜிட்டல் முகவர்களும். தேர்தல் ஆணையத்தால் பி.எல்.ஒ ஆக நியம்பட்டுள்ளவர்களுடன் இணைந்து செயலாற்றி வெற்றி வாக்கு சாவடியாக கிளைக்க செயலாளர்கள், நிர்வாகிகள், ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகளும், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகளுடனும் ஒருங்கிணைந்து செயல் பட்டு என் வாக்குச் சாவடி, வெற்றி வாக்குச்சாவடி, என்ற இலக்கை அடைய வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது.

கூட்டத்தில் ஒன்றிய நிர்வாகிகள் அ.வேதநாயகம், எஸ். புருஷேத்மதாஸ், ஆர்.கே.கண்ணன், ப.கிரிதரன், சி.வீரமணி, ரவிச்சந்திரன், வெண்ணிலாபாபு, எஸ்.சிவக்குமார், பாரதி மோகன். மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள்

ஜவகர் பாட்சா, ஜீவானந்தம் வைத்தியநாதன், முத்துராதாகிருஷ்ணன், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் பா.ஆத்மநாதன் மற்றும் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள், , வாக்குச் சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ. 2), பூத் டிஜிட்டல் ஏஜென்ட் (பி.டி.ஏ) கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, பர்கூர் வடக்கு ஒன்றியம் காரகுப்பம் ஊராட்சி , சின்ன காரகுப்பம் கிராமத்தில் பகுதி நேர நியாய விலை கடை மற்றும் பர்கூர் வடக்கு ஒன்றியம், ஒப்பதவாடி ஊராட்சியில் , தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலம் தாழ்வழுத்த மின்சார குறையினை போக்கி புதிய மின் மாற்றியினை மக்கள் பயன்பாட்டிற்காக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் துவக்கி வைத்தார் இந்நிகழ்ச்சியில் ராஜேந்திரன் ,அறிஞர் , பேரூர் கழக செயலாளர் வெங்கடப்பன் உள்ளிட்ட ஏராளமானோர் உடன் இருந்தனர்.